**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் (ஏடிபி கடன் இல 2710 – எஸ்ஆர்ஜ, 2711- எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) மற்றும் ஏஎவ்டி கடன் உடன்படிக்கை இல. சீஎல்கே 1003 -01 -ஜே) -2013**

---

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2710- எஸ்ஆர்ஜ (சாதாரண செயற்பாடுகள்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் 2711- எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) (விசேட செயற்பாடுகள்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின் தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

---

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின்படி, முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் மற்றும் தற்போதைய நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் கீழுள்ள தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை (என்டபிள்யூஎஸ்&டிபீ) மற்றும் வட மகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் (எம்எல்ஜீபீசீ) கீழுள்ள வடக்கு மாகாண சபையின் (என்பிசீ) ஊடாக மாகாண நீர்ப்பாசத் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாவுள்ளது. செயற்திட்டப் பகுதியில் வசிப்பவர்களிற்கான நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவது மற்றும் யாழ்ப்பாணம் தீபகற்பத்தின் நீர் வளங்களை முகாமை செய்வதும் பாதுகாத்தலும் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டமானது நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்டகட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல், யாழ்ப்பாணம் நீர் வளங்கள் முகாமைத்துவத்தினை வலுப்படுத்தல் மற்றும் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தை (ஜேஆர்ஓ) கட்டியெழுப்புதல் என்பவற்றினை கொண்டுள்ளன. கடன் உடன்படிக்கைகளின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 18,326 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 164.04 மில்லியனானதுடன் அதில் ரூபா 10,055 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 90 மில்லியன் அல்லது 54.86 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் ரூபா 5,362 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48 மில்லியன் அல்லது 29.26 சதவீதம் பிரான்கைஸ்டி அபிவிருத்தி (ஏஎவ்டி) முகவர் வழங்குவதற்கு உடன்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 2,909 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 26.04 மில்லியன் அல்லது 15.88 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் (ஜீஓஎஸ்எல்) நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் இரணைமடுக் கூறு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் அக்கூறிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கம் ஒதுக்கிய நிதிகள் முறையே ரூபா 1,513 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13.55 மில்லியன் மற்றும் ரூபா 354 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 3.17 மில்லியனாகும். செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 பெப்ரவரி 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 பெப்ரவரி 14 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின்படி தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். இந்த பொறுப்பு நிதிக்கூற்றுக்கள் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயமாகச் சமர்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைத்தல், அமுல்ப்படுத்தல், பேணுதல் மற்றும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பிரயோகித்தல் அச்சந்தர்ப்பத்தில் பொருத்தமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளகப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தனவா என்பதும், ,

(ஐ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப கட்டுநிதி, அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்.

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, முன்னைய ஆண்டிற்கான ரூபா 183,593,533 செலவினத்துடன் ஒப்பிடும் போது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 271,120,778 ஆனதுடன் மீளாய்வாண்டிற்கான மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 454,714,311 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே காட்டப்படுகின்றது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 95,003,555 | 140,341,560 | 235,345,115 |
| சுற்றாடல் மற்றும் சமப்படுத்தல் | - | 267,136 | 267,136 |
| காணி சுவீகரிப்பு | 2,495,072 | - | 2,495,072 |
| மோட்டார் வாகனங்கள் | 23,504,399 | - | 23,504,399 |
| உபகரணங்கள் | - | 530,193 | 530,193 |
| அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 963,613 | 3,563,422 | 4,527,035 |
| ஆலோசனை (ஆர்எஸ்சீ வடக்கு) | 4,900,000 | - | 4,900,000 |
| ஆலோசனை (பிஜஈசீஈ) | 107,669,191 | - | 107,669,191 |
| செயற்திட்ட நிர்வாகம் மற்றும் அமுலாக்கல் | 36,584,948 | 38,891,222 | 75,476,170 |
| மொத்தம் | 271,120,778 | 183,593,533 | 454,714,311 |

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதிய கணக்கின் தொழிற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

| ஏடிபி கடன் இல. 2710-எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 1,169,380 | 148,699,264 |
| கூட்டு: மீளளிப்புகள் | 233,802 | 30,594,144 |
| வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | 3,472,943 |
| | 1,403,182 | 182,766,351 |
| கழி: பற்றுதல்கள் | 317,925 | 40,865,811 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 1,085,257 | 141,900,540 |

| ஏடிபி கடன் இல. 2711-எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---:|---:|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 1,992,521 | 253,370,569 |
| கூட்டு: மீளளிப்புகள் | 369,147 | 48,359,298 |
| வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | 6,595,863 |
| | 2,361,668 | 308,325,730 |
| கழி: பற்றுதல்கள் | 423,427 | 55,417,998 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 1,938,241 | 252,907,732 |

## 5. கணக்கீட்டுக் குறைபாடுகள்

கடன் உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், ஏற்பட்ட ரூபா 20,114,260 கூட்டுமொத்தத் தொகையான கடப்பாட்டு மற்றும் வட்டிக் கட்டணங்கள் செயற்திட்டத்தின் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

**(ஐ.அ.டொலர் மில்லியன்)**

| | ஏடிபீ | | ஏஎவ்டி | இலங்கை அரசாங்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | விசேட நடவடிக் கைகள் | சாதாரண நடவடிக் கைகள் | | | |
| கடன் உடன்படிக்கையின்படி உடன்பட்ட உதவுதொகை | 70 | 20 | 48 | 26.04 | 164.04 |
| கழி: இரணைமடு குளக் கூறின் நிர்மாணத்திற்கான நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீடு | 13.55 | - | - | 3.17 | 16.72 |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்காக நிதி ஒதுக்கீடு | 56.45 | 20 | 48 | 22.87 | 147.32 |
| 2013 திசெம்பர் 31 வரை ஏற்பட்ட செலவினம் | 1.20 | 1.13 | 0.40 | 0.74 | 3.48 |
| சதவீதமாக நிதிகளின் பயன்பாடு | 2.12 | 5.65 | 0.83 | 3.23 | 2.36 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி முன்யேற்றம் மிகவும் மெதுவாக உள்ளது என வெளிப்பட்டது.

(ஆ) தேசிய பாதீட்டில் 2013 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்தின் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் செயலவினத்திற்காக முறையே ரூபா 500,000,000 மற்றும் ரூபா 300,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் வேறு செயற்திட்டங்களிற்கு ரூபா 150,000,000 ஒதுக்கீடு மாற்றப்பட்டிருந்தது. பின்னர், ஒதுக்கப்பட்ட உள்ளூர் நிதிகளில் ரூபா 56,055,840 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 6.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக பிரதான மூலம் இரணைமடுக் குளமாக உள்ளது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகள் செயற்திட்டத்தின் மூலமாக இரணைமடு குளத்தை பயன்படுத்துவதற்கு அப்பகுதி சமூதாய எதிர்ப்பு காரணமாக திட்டமிட்டவாறு அமுலாக்க முடியாதிருந்தது.

(ஆ) திருத்தப்பட்ட கொள்வனவு திட்டத்தின் பிரகாரம்,செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கெல்லை ரூபா 10,247 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 91.72 மில்லியன் கிரயத்தில் 13 பொதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், பொருட் கொள்வனவு, நிர்மாண வேலைகள் மற்றும் ஆலோசனை போன்றவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் கீழ் திருப்திகரமான முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட பணிப்பாளரின் விளக்கத்தின் பிரகாரம், 2013 சனவரி மாதத்தில் ஆலோசனையாளர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் கருத்துரீதியான வடிவமைப்பு மற்றும் கேள்வி ஆவணங்கள் தயாரித்தல் போன்றவற்றில் பிரதானமாக ஈடுபடுத்தப்பட்டிருந்தார். ஆகவே, விநியோக வலையமைப்பு முறைமை வடிவமைத்தல் மற்றும் தண்ணீர் கோபுரங்களை நிர்மாணித்தல் போன்றன தாமதப்பட்டிருந்தன.